[1982 மார்ச் 25

திண்டுக்கல்—கம்பம் இரயில்பாதை அமைக்கும் திட்டம்.

*வினா எண். 659. திரு. கா. கோபாலகிருஷ்ணன் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) திண்டுக்கல்—கம்பம் (வழி) பெரியகுளம் இரயில் பாதை அமைக்கும் திட்டம் மத்திய அரசுக்கு பரிந்துரை செய்யப் பட்டுள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : (அ) ஆம்.

(ஆ) திண்டுக்கல்லில் இருந்தோ அல்லது கோடைக்கானல் சாலையில் இருந்தோ கம்பத்திற்கு ஒரு புதிய இரயில் பாதை அமைக்கக் கோரி இவ்வரசு 1979 ஆம் ஆண்டு முதல் மத்திய அரசை வலியுறுத்தி வந்தது. ஆனால் நிதி நிலை பற்றாக்குறை காரணமாக 6-வது திட்ட காலத்தில் மேற்படி பணியை ஏற்க இயலாதென மத்திய அரசு 1981 ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதத்தில் தெரிவித்துள்ளது.

திரு. க. கோபாலகிருஷ்ணன் : இந்தப் பாதையில் ஒரு நாளைக்கு ஏறக்குறைய 200 லாரி லோடுகள் வெளி மாநிலங்களுக்கு செல்கின்றன. அதேபோல் இந்த பகுதியில் உள்ள கோடைக்கானல், தேக்கடி போன்றவை முக்கிய சுற்றுலா ஸ்தலங்களாக இருக்கின்றன. எனவே அதன் முக்கியதுவத்தைத் கருதி இதை விரைவில் செயல்படுத்த இந்த அரசு மத்திய அரசுக்குப் பரிந்துரை செய்யுமா ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : ஏற்கெனவே இந்தத் திட்டம் பற்றி 1979-ஆம் ஆண்டு இதன் முக்கியத்துவம் கருதித் தான் சொல்லியிருக்கிறார்கள். அதற்கு நடவடிக்கைகள் எடுக்கமுடியாது என்று இப்போது சொல்லியிருக்கிறார்கள். எனவே அதற்கு மேல் சொல்வதற்கு வாய்ப்பில்லை:

திரு. கா. கோபலகிருஷ்ணன் : நம் தமிழகத்தைப் பொறுத்தவரையில் ரெயில்வே துறை மாற்றாந்தாய் மனப் பான்மையோடுதான் செயல்பட்டு வருகிறது. எனவே தமிழ் நாட்டிற்கு வேண்டிய முக்கிய திட்டங்களை மத்திய அரசுக்கு வற்புறுத்தி ஏதாவது எழுச்சிநாள் கொண்டாடப்படுமா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : இந்த அரசைப் பொறுத்த வரையில் என்னென்ன திட்டங்கள் நமக்கு பயனுடையதாக இருக்குமோ அவற்றை மத்திய அரசிடம் சொல்லி வற்புறுத்தி வாங்கத்

1982 மார்ச் 15]

தயாராயிருக்கிறது. அந்த அடிப்படையில்தான் 1979-ல் இதை வலியுறுத்தி எழுதியிருக்கிறோம். மீண்டும் வேண்டுமானால் தொடர்ச்சியாக எழுதிக்கொண்டேயிருக்கலாம்.

திரு. ஏ. சி. சண்முகம் : திண்டுக்கல்—பெரியகுளம் ரெயில்வே பாதை முக்கியமானதொரு திட்டம் என்று சொன்னாலும் கூட தமிழ் நாட்டில் எல்லோரையும் பாதிக்கும்படியான ஒரு முக்கியமான பிரச்சினை பற்றி பாராளுமன்றத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. ஊட்டி ரெயில்வே பாதையை நிரந்தரமாக மத்திய அரசு நிறுத்தியிருப்பதாக பாராளுமன்றத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. அதை மீண்டும் எடுத்து நடத்த மத்திய அரசை மாநில அரசு வற்புறுத்துமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மூலக் கேள்விக்கும் இதற்கும் சம்பந்தமில்லை.

பாண்டியன் போக்குவரத்துக் கழகத்திற்கு 1979–1981 ஆண்டுகளுக்கு வழங்கப்பட்ட புதிய பேருந்துகள்

* வினா எண். 660 : **திரு. என். எஸ். வி. சித்தன் :** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

பாண்டியன் போக்குவரத்துக் கழகத்திலிருக்கு 1979–80, 1980–81 ஆண்டுகளுக்கு வழங்கப்பட்ட புதிய பஸ்கள் எத்தனை?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : 1979–80, 1980–81-ஆம் ஆண்டுகளில் பாண்டியன் சாலைப் போக்குவரத்துக் கழகத்திற்கு வழங்கப்பட்ட புதிய பேருந்துகளின் விவரம் பின்வருமாறு :—

1—4—1979	முதல்	31—3—1980	வரை	115
1—4—1980	முதல்	31—3—1981	வரை	196

திரு. எஸ். என். இராமசாமி : பாண்டியன் போக்குவரத்துக் கழகத்திலிருந்து திருநெல்வேலி மாவட்டத்திற்கு எவ்வளவு புதிய வழித்தடங்கள் போடப்பட்டுள்ளன ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : புதிய பேருந்துகள் பற்றித்தான் கேட்டிருக்கிறார்கள். திருநெல்வேலி மாவட்டத்தில் எவ்வளவு புதிய வழித்தடங்கள் என்பதற்கு இப்போது என்னிடம் கணக்கு இல்லை. 1980-ல் வாங்கப்பட்ட பேருந்துகளில் ஏறத்தாழ 102 பேருந்துகள் புதிய வழித்தடங்களுக்குப் பயன்படுத்தப்பட்டிருக்கிறது 1981-ல் வழங்கப்பட்டதில் 109 புதிய வழித்தடங்களுக்குப் பயன்படுத்தப்பட்டிருக்கிறன்ன.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS